# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023–2024

# எழுதுபொருள் மற்றும் அச்சு

## மானியக் கோரிக்கை எண். 30

**மு.பெ. சாமிநாதன்**
செய்தித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

**மானியக் கோரிக்கை எண் 30**

**எழுதுபொருள் மற்றும் அச்சு**

**பொருளடக்கம்**


| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தோற்றமும் வளர்ச்சியும் | 2 |
| 2 | துறையின் குறிக்கோள் | 3 |
| 3 | அலகுகளின் அமைவிடங்கள் | 4-6 |
| 4 | எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஒரு கண்ணோட்டம் | 6-32 |
| 5 | அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் | 32-34 |
| 6 | பெயர் மாற்றம் | 34-36 |
| 7 | அரசு அச்சகங்களில் 2022-2023 ஆம் ஆண்டில்அரசுத்துறைகளுக்குஅச்சிட்டு வழங்கப்பட்ட பணிகளின் விவரம் | 36-45 |
| 8 | தொழிலாளர் நலன் | 46-53 |
| 9 | பணி நியமனங்கள் | 53 |
| 10 | வரவு – செலவு | 54 |
| 11 | கழித்தொதுக்கம் | 55 |
| 12 | தகவல் பரவலாக்கம் | 56 |
| 13 | நிறைவுரை | 57 |

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# எழுதுபொருள் மற்றும் அச்சு

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2023-2024

**"அச்சிடுதல் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் ஒரு நூற்றாண்டு, ஆயிரம் ஆண்டுகளுக்குச் சமமாக இருந்தது "**

**முன்னுரை**

அச்சு இயந்திரமானது மனித வளர்ச்சியின் தோற்றத்தையும் மற்றும் நவீன உலகத்தின் தொடக்கத்தையும் ஏற்படுத்தியது. கலை, இலக்கியம், பத்திரிக்கை, அரசியல், புலமை, அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் அனைத்து துறைகள் தொடர்புடைய சிந்தனைகளில் அனைத்து முக்கிய மாற்றங்களையும் கொண்டு வருவதற்கு கருவியாக இருந்து, அச்சு தாக்கத்தை ஏற்படுத்தியது. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னர், தகவல் தொடர்பில் ஏற்பட்ட காலவிரயம் குறைக்கப்பட்டு,

தகவல்கள் மக்களை எளிதாக சென்றடைய அச்சகமும், அச்சு இயந்திரங்களும் உந்து சக்தியாக திகழ்கின்றன. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது நவீன தொழில்நுட்ப வளர்ச்சிற்கேற்ப நவீன இயந்திரங்களை நிறுவி அச்சுப் பணிகளை பல வண்ணங்களில், உயரிய தரத்துடனும் குறுகிய காலத்திலும் செயலாக்கம் செய்து அனைத்துத் துறைகளுக்கும் சேவைத் துறையாக செயல்பட்டு வருகிறது.

## 1. தோற்றமும் வளர்ச்சியும்

அனைத்து அரசுத் துறைகளின் முதுகெலும்பாகத் திகழும் அரசு மைய அச்சகம் முதன் முதலில் சென்னை மாகாணத்தின் ஆட்சி பீடமாக இருந்த புனித ஜார்ஜ் கோட்டையில் 1831–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17–ம் நாள் அன்று அரசின் அரசிதழ்களை அச்சிட்டு வெளியிட 10 பணியாளர்களுடன் ஒரு சிறிய அச்சகமாகத் துவங்கப்பட்டது. இத்தகைய எளிய துவக்கத்துடன், படிப்படியாக முன்னேற்றம் கண்டுள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் இன்றைய அகவை 191 ஆண்டுகள் ஆகும்.

## 2. துறையின் குறிக்கோள்

அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் எழுதுபொருள் மற்றும் அச்சுத் தேவைகளை, அரசு மைய அச்சகம், 6 கிளை அச்சகங்கள் மற்றும் எழுதுபொருள் அலுவலகம் மூலம் நிறைவு செய்வதே இத்துறையின் குறிக்கோள் ஆகும். இதைத் தவிர, பல்கலைக்கழகத் தேர்விற்கான விடைத்தாள்கள், அரசு சார் நிறுவனங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் நீதித்துறை மூலம் வெளியிடப்படும் நூல்கள் ஆகியவற்றை அச்சுக் கட்டணங்கள் பெற்று அச்சிட்டு அரசுக்கு வருவாய் ஈட்டக்கூடிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சி கண்டுள்ள இக்காலச் சூழலில் அரசு அச்சகங்களின் தரத்தினை உயர்த்தும் தொடர் நடவடிக்கையில், நவீன தொழில்நுட்பத்துடன், குறைந்த மனித ஆற்றலைக் கொண்டு விரைவாகவும், பல வண்ணங்களில் உயர் தரத்துடனும் அச்சிடும் வகையில், நமது நாட்டின் சிறந்த அரசு அச்சகமாக செயல்படுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## 3. அலகுகளின் அமைவிடங்கள்

ஆணையரகத்தின் தலைமையின் கீழ் அரசு மைய அச்சகம், 6 அரசு கிளை அச்சகங்கள் மற்றும் ஓர் அரசு எழுதுபொருள் அலுவலகம் ஆகியவை அரசின் அச்சுத் தேவைகள் மற்றும் எழுதுபொருள் வழங்குதலை நிறைவு செய்து வருகின்றன.

| வ. எண். | அலகு | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை. | 110, அண்ணாசாலை, சென்னை–600 002. |
| 2. | அரசு மைய அச்சகம், சென்னை. | தங்க சாலை, வள்ளலார் நகர், சென்னை–600 001. |
| 3. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | பொது அலுவலக வளாகம், சத்தியமூர்த்தி சாலை, புதுக்கோட்டை–622 001. |
| 4. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | உளுந்தூர்பேட்டை பிரதான சாலை, விருத்தாசலம்–606 002. |

| வ. எண். | அலகு | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி. | பிளாட் எண்.சி–9, துவாக்குடி, திருச்சிராப்பள்ளி–620 015. |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம். | ஐந்து ரோடு, சிட்கோ வளாகம், சேலம்–636 004. |
| 7. | அரசு கிளை அச்சகம், மதுரை. | ரேஸ் கோர்ஸ் சாலை, கோ. புதூர், மதுரை–625 007. |
| 8. | அரசு கிளை அச்சகம், மதுரை. | சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகம், மதுரை–625 023. |
| 9. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை. | 64, இராஜாஜி சாலை, சென்னை–600 001. |

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இயங்கி வந்த அரசு கிளை அச்சகத்தில் வழக்குப் பட்டியல்கள் அச்சிடும் பணி நிறுத்தப்பட்டதாலும், நீதிமன்ற வளாக விரிவாக்கத்திற்கான இடப்பற்றாக்குறை காரணமாகவும், அச்சக வளாகத்தினை நீதித்துறை வசம் ஒப்படைக்க கோரியதைத் தொடர்ந்து, இவ்வச்சகத்தின் பயன்பாட்டிலிருந்த இயந்திரங்களை தேவையின்

அடிப்படையில், அரசு மைய அச்சகம் மற்றும் பிற கிளை அச்சகங்களுக்கு மாற்றம் செய்து நிறுவப்பட்டும், இவ்வச்சகத்தில் பணிபுரிந்து வந்த 65 பணியாளர்கள் துறையின் பிற அலகுகளில் காலியாக இருந்த பணியிடங்களில் பணியிட மாறுதல் செய்யப்பட்டதை தொடர்ந்தும் அச்சக வளாகம் 30.11.2022 அன்று நீதிமன்றம் வசம் ஒப்படைக்கப்பட்டது.

## 4. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஒரு கண்ணோட்டம்

### அ. நிருவாகம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது இந்திய ஆட்சிப் பணி நிலையில், துறைத் தலைவரான ஆணையர் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு இணை இயக்குநர் பொது நிருவாகப் பணிகளையும், பொது மேலாளர் நிலையில் தொழில்நுட்பம் தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருவதோடு, தினசரி பணிகள் மற்றும் கொள்கை ரீதியிலான முடிவுகளை மேற்கொள்வதில் இவர்கள் ஆணையருக்கு உறுதுணையாகப் பணியாற்றி வருகின்றனர். கருவூலம்

மற்றும் கணக்குத் துறையிலிருந்து வரவு–செலவு, கணக்கு மற்றும் தணிக்கைப் பணிகளைக் கண்காணிக்க முதன்மை கணக்கு அலுவலர் ஒருவரும், அச்சுக் கட்டணம் நிர்ணயம் மற்றும் தளவாடங்களை மதிப்பீடு செய்வதற்கு கணக்கு அலுவலர் ஒருவரும், தொழிலாளர் நலன்களை கண்காணிக்க தொழிலாளர் நலத் துறையிலிருந்து தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும் மற்றும் உதவித் தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும் மாற்றுப் பணியில் ஆணையரகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**ஆ. பணியாளர்கள்**

4870 பணியிடங்கள் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்கென ஒப்பளிக்கப்பட்டதில், தற்போது 241 மாற்றுத் திறனாளி பணியாளர்கள் பணிபுரிகின்றனர். 573 பெண் மற்றும் 992 ஆண் பணியாளர்கள் என ஆக மொத்தம் 1565 பணியாளர்கள் மட்டும் பணிபுரிந்து வருகின்றனர்.

**மாற்றுத் திறனாளி பணியாளர்களின் விவரம்:**

பார்வைத் திறன் குறைந்தோர் 140 (ஆண்–130, பெண்–10), செவித்திறன் மற்றும் பேசும் திறன் குறைந்தோர் 7 (ஆண்–5, பெண்–2), உடல் குறைபாடுகள் உள்ளோர் 93 (ஆண்–61, பெண்–32), மனநலம் சார்ந்த குறைபாடு உள்ளோர் 1 (ஆண்) என மொத்தம் 241 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் தனிச் சிறப்பாக மாற்றுத் திறனாளிகள் தன்னம்பிக்கையுடன் வாழ, அரசுப் பணியில் அரசு நிர்ணயித்துள்ள 4 விழுக்காடு ஒதுக்கீட்டிற்கும் மேலாக 15 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள் இத்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அரசு அச்சகங்களில் நிறுவப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான தொழில்நுட்பக் கல்வித் தகுதி பெற்றுள்ள 383 பெண் பணியாளர்களுடன் (37 விழுக்காடு) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை செயல்பட்டு வருகிறது.

## இ. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அதன் அலகுகள்

### I. ஆணையரகம்

ஆணையரக நிருவாக அமைப்பு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 14 அலுவலர்கள் மற்றும் 200 பணியாளர்களுடன் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் தலைமையிடமாக செயல்பட்டு வருகிறது.

நிருவாகப் பிரிவில் இணை இயக்குநர் / மாவட்ட வருவாய் அலுவலர்–1, உதவி இயக்குநர் நிலையில் ஆணையரின் நேர்முக உதவியாளர்–1, உதவி இயக்குநர்கள்–2, தொழில்நுட்ப பிரிவில் பொது மேலாளர்–1, துணைப் பணி மேலாளர் நிலையில் மேலாண்மைக் குறிக்கோள் ஆலோசகர்–1, உதவிப் பணி மேலாளர் (கொள்முதல்)–1 மற்றும் உதவிப் பணி மேலாளர் (படிவங்கள்)–1, வெளியீடுகள் பிரிவில் துணை இயக்குநர்–1, தொழிலாளர் நலப் பிரிவில் உதவி ஆணையர் நிலையில் தொழிலாளர் நல அலுவலர்–1, துணை ஆய்வாளர் நிலையில் உதவித் தொழிலாளர்

நல அலுவலர்–1, கணக்கு மற்றும் தணிக்கைப் பிரிவில் முதன்மைக் கணக்கு அலுவலர்–1 மற்றும் விலை மதிப்பீட்டு கணக்கு அலுவலர்–1 ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர்.

**தலைமை அலுவலகத்தின் பணிகள்**

(i) காலத்திற்கேற்ப நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள், உதிரி பாகங்கள், அச்சுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் பல்வகை காகிதங்கள், அட்டைகள், அச்சுப் பயன்பாட்டுப் பொருட்கள், அலுவலகப் பயன்பாட்டு இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு அச்சகங்களுக்கு கொள்முதல் செய்து வழங்குதல்.

(ii) காகித இனங்கள் மற்றும் அச்சுப் பணிக்குத் தேவையான காகித இனங்களில் 90 சதவீதம், தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) மூலமாகவும், சிறப்பு வகை

காகிதங்கள் மற்றும் அட்டைகள், தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகளின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத் துறைகள் / அரசு அலுவலகங்களுக்கு கொள்முதல் செய்தல்.

(iii) அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் உள்ள இயந்திரங்கள், பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் கொள்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அச்சுப் பணிகள் ஒதுக்கீடு செய்து அதன் செயலாக்கத்தினை கண்காணித்தல்.

(iv) பல்கலைக்கழக விடைத்தாட்கள், படிவங்கள், பதிவேடுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தொல்லியல் துறை, தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் வெளியிடும் நூல்களுக்கு அச்சுக் கட்டணம் நிர்ணயித்தல், தமிழ் வளர்ச்சித் துறையின் மானியத்துடன் தனியார் அச்சகங்களில் அச்சடிக்கப்பட்ட நூல்களுக்கான அச்சுக் கட்டணத்தை சரிபார்த்தல் மற்றும் விலை நிர்ணயித்தல்.

(v) கட்டண முறையில் அரசிதழ்களில் பெயர் மாற்றம் மற்றும் மதம் மாற்றம் தொடர்பான பெயர் மாற்றம் மற்றும் திருநங்கைகளுக்கு இலவசமாக பெயர் மாற்றம் செய்தல், அரசின் அறிவிக்கைகள், நீதிமன்றங்களால் வெளியிடப்படும் நொடிப்பு மனுக்கள் ஆகியவற்றை வெளியிடுதல் போன்றவை ஆணையரகத்தில் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகளாகும்.

(vi) மேலும், இத்துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணியமைப்பு குறித்த பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

II. **அரசு எழுதுபொருள் அலுவலகம்**

மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டிலிருந்த எழுதுபொருள் பிரிவும், தனியாக செயல்பட்டு வந்த அச்சுத் துறையும் இணைக்கப்பட்டு, 1953-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் **"எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையாக"** மாற்றப்பட்டு, அரசு எழுதுபொருள் அலுவலகம், இராஜாஜி சாலை, சென்னையில் இயங்கி வருகிறது.

அ) இரு உதவி இயக்குநர்கள், ஒரு உதவிப் பணி மேலாளர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 74 பணியாளர்களுடன் இவ்வலுவலகம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத் துறைகளுக்குத் தேவையான காகிதங்கள், நகல் எடுக்கும் காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து இருப்பில் வைத்து தேவைப் பட்டியலின் அடிப்படையில் கட்டணம் ஏதுமின்றி வழங்கி வரும் அலுவலகமாகச் செயல்படுகிறது.

ஆ) நாடாளுமன்ற தேர்தல், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தலுக்குத் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பல்வகைப் பொருட்களை கொள்முதல் செய்து அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு வழங்கும் பணிகள் எழுதுபொருள் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தவிர கட்டணத்தின் அடிப்படையில், மருத்துவம் மற்றும்

மக்கள் நல்வாழ்வுத் துறை உள்ளிட்ட 67 அலுவலகங்களுக்கு எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

இ) 2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, அரசு எழுதுபொருள் அலுவலகக் கட்டடத்தினை புனரமைப்பதற்கு ஏதுவாக ரூ.1,25,00,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 13.02.2023 முதல் பொதுப் பணித் துறை மூலம் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

III. **அரசு மைய அச்சகம், சென்னை**

அ) அரசு மைய அச்சகமானது டிசம்பர் திங்கள் 1831–ஆம் ஆண்டு, 10 தொழிலாளர்களுடன் புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் அரசிதழ்களை அச்சிடுவதற்கென துவங்கப்பட்டு 1888–ஆம் ஆண்டில் தங்கசாலையில் உள்ள கட்டடத்திற்கு (Mint Building) மாற்றப்பட்டது.

அச்சகத்தின் செயல்பாடுகள் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புப் பணிகளுக்காக, காவல் துறையிலிருந்து ஒரு துணை காவல் கண்காணிப்பாளரும், தொழிலாளர் நலன் பேண ஒரு உதவி தொழிலாளர் நல அலுவலரும், அச்சக வளாகத்தில் சுத்தம் மற்றும் சுகாதாரம் பேண, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறையிலிருந்து சுகாதார ஆய்வாளர் ஒருவரும் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.

இவ்வச்சகம் நிருவாகப் பிரிவு, கணக்குப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, சுகாதாரம் மற்றும் தொழிலாளர் நலப் பிரிவுகள், 672 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் பணி மேலாளர்–I தலைமையின் கீழ் செயல்படுகிறது.

தொழில்நுட்ப பிரிவில் பணி மேலாளர்–I, பணி மேலாளர்–II, துணைப் பணி மேலாளர்கள்–3, உதவிப் பணி மேலாளர்கள்–10, நிருவாகம் மற்றும் அமைச்சுப் பிரிவில் உதவி இயக்குநர்கள்–3, இயந்திரங்கள் மற்றும் கட்டடங்கள் பராமரிப்பு

பிரிவில் உதவிப் பொறியாளர்–1, பாதுகாப்பு பிரிவில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்–1, வரவு–செலவு மற்றும் கணக்குப் பிரிவில் உதவிக் கணக்கு அலுவலர்–1, தொழிலாளர் நலப்பிரிவில் உதவித் தொழிலாளர் நல அலுவலர்–1 மற்றும் சுகாதாரப் பிரிவில் சுகாதார ஆய்வாளர்–1 ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர்.

ஆ) அரசு மைய அச்சகத்தில் உள்ள வரவு–செலவு மற்றும் அதிரகசியப் பிரிவுகள், அரசிடமிருந்து பெறப்படும் அனைத்து விதமான கமுக்கப் பணிகளை மிகுந்த பாதுகாப்புடனும், இரகசிய தன்மையுடனும் அச்சிட்டு வழங்கிட ஞாயிற்றுக் கிழமை உட்பட வாரம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

இ) மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குத் தேவையான காகிதத்தாள் கற்றை (Letter Pad), நிதிநிலை அறிக்கை, அனைத்து துறைகளுக்கான மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்புகள், பல்கலைக்கழக

தேர்வுகளுக்கான விடைத்தாட்கள், 10-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான அரசுத் தேர்வுத் துறையின் விடைத்தாட்கள், நாட்காட்டிகள், நாட்குறிப்பேடுகள் மற்றும் அகல துணி வேய்ந்த காகித உறைகள் ஆகியவை நவீன அச்சு இயந்திரங்களைக் கொண்டு குறித்த நேரத்தில் உயரிய தரத்துடன் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

ஈ) அரசு மைய அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், அரசிதழ்கள் மற்றும் நாட்காட்டிகள் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கவும், அரசு ஆவணங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் 2021-2022-ஆம் நிதியாண்டில், முதன் முதலாக இத்துறைக்கென ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) மதிப்பில் சுமையூர்தி (பதிவெண்.TN 01 G 8902) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

உ) 2022-2023-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட

அறிவிப்புகளின்படி, அரசு மைய அச்சகத்திற்கு கொள்முதல் செய்து நிறுவப்பட்ட இயந்திரங்களின் விபரங்கள்:

(i) குறைந்த காலம் மற்றும் செலவில், குறைந்த எண்ணிக்கையிலும், பல வண்ணங்களிலும் வழுவழுப்பான தாள்கள், அட்டைகள் மற்றும் மென்தகடுகள் ஒட்டப்பட்ட அச்சுத் தாள்களில் அச்சுப் பணிகள் செயலாக்கத்திற்காக, நான்கு வண்ண டோனர் அடிப்படையிலான எண்ணிம உற்பத்தி அச்சுப் பொறி (Four Colour Toner Based Digital Production Printer) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(ii) குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில் குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(iii) குறைந்த கால அவகாசத்தில் குறைந்த மனித ஆற்றலுடன் பல்வேறு நிலையிலான அச்சு செயலாக்க நடைமுறைகளை தவிர்த்து, பல வகையான காகிதங்களில், மாறுபடும் தரவுகளுடன் (Variable Data) பல வண்ணங்களில் அச்சு செயலாக்கம் செய்வதற்கு, நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) 2 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(iv) அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சடிக்கப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) பெரியது 50 எண்ணிக்கைகள் மற்றும் சிறியது 50 எண்ணிக்கைகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ஊ) அரசு மைய அச்சகத்தில் முன்னுரிமை அடிப்படையில் அச்சிடப்படும் முக்கிய இனங்கள்:

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கை குறித்த உரை, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வேளாண் நிதிநிலை அறிக்கை குறித்த உரை, விரிவான மானியக் கோரிக்கை மற்றும் வரவு–செலவு ஆவணங்கள், அனைத்து அரசுத் துறைகளுக்கான கொள்கை விளக்க குறிப்பு மற்றும் செயல்முறைத் திட்டம், அதிரகசியப் பணிகள், பல்வேறு சட்டமன்ற குழுக்களின் அறிக்கைகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கை குறிப்புகள்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கைகள், படிவங்கள் மற்றும் வாக்குச் சீட்டுகள், பொதுத் தேர்தல் தொடர்பான

அறிவிக்கைகள், படிவங்கள், புத்தகங்கள், கையேடுகள், சிறப்பு அட்டைகள், பல்வேறு அளவிலான உறைகள், வாக்குச் சீட்டுகள், பொது மக்களுக்கான வெளியீடுகள் மற்றும் படிவங்கள்.

தமிழ்நாடு அரசிதழ்கள், சட்ட விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள் மற்றும் பல வண்ணங்களில் ஆண்டு அறிக்கைகள், அரசு தொழில்நுட்ப கல்வித் துறை மற்றும் அரசுத் தேர்வுகள் துறை நடத்தும் தேர்வுகளுக்கான விடைத் தாட்கள் மற்றும் துணி வேய்ந்த உறைகள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள், கால முறை வெளியீடுகள், மக்கள் நல்வாழ்வு, சமூகநலம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளுக்கான படிவங்கள், பல்கலைக்கழகங்களுக்கான விடைத்

தாட்கள், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கான பலவகை புத்தகங்கள், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறைக்குத் தேவையான புற நோயாளிகளுக்கான அட்டைகள் மற்றும் மருத்துவ புத்தகங்கள்.

மேலும், இவ்வச்சகத்தில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்படுகின்றன.

IV. **அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கீழ் 1883–ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த இவ்வச்சகம், 1949–ஆம் ஆண்டு முதல் அரசு கிளை அச்சகமாக இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகமானது துணைப் பணி மேலாளர் ஒருவரை அலகு தலைவராகக் கொண்டு 84 பணியாளர்களுடன் செயல்படுகிறது.

இக்கிளை அச்சகத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஓய்வூதியத் துறை, சுற்றுச்சூழல், காலநிலை

மாற்றம் மற்றும் வனத் துறை, காவல் துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான 290 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை ஆண்டுதோறும் தேவைக்கேற்ப அச்சிடப்பட்டு கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

இவை தவிர, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இக்கிளை அச்சகத்தில் செயலாக்கப்படுகின்றன.

2022-2023-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள்,

கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் 50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

V. **அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்**

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, பொதுப் பணித் துறை, தொழில் துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான 369 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டுத் தேவைப் பட்டியல் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

1961–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், 1981–ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில், துணைப் பணி மேலாளர் தலைமையில், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள்

மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 91 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

மேலும், வேலூர், கடலூர், திருப்பத்தூர், விழுப்புரம், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும்

50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

VI. **அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி**

சிறைத் துறை, காவல் துறை மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான பொது படிவங்கள், தன் பதிவேடுகள் உட்பட 126 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை அச்சிடப்பட்டு ஆண்டுதோறும் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இவை தவிர, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்படுகின்றன.

1965–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இருபதாம் நாள், திருச்சிராப்பள்ளி அரியமங்கலம் தொழிற்பேட்டையில் துவங்கப்பட்ட அரசு கிளை அச்சகம், 1990–ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில், சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் துணைப் பணி மேலாளர் தலைமையின் கீழ், உதவிப்

பணி மேலாளர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில் நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 99 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

2022-2023-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் 50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

VII. **அரசு கிளை அச்சகம், சேலம்.**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, அரசுத் தேர்வுகள் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, காவல் துறை மற்றும் அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் 146 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் ஒவ்வொரு ஆண்டின் தேவைக்கேற்ப அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

இவ்வச்சகம் 1966–ஆம் ஆண்டு சேலம் குகைப் பகுதியில் துவங்கப்பட்டு, பின்னர், ஐந்து சாலையில் உள்ள "சிட்கோ" தொழிற்பேட்டையில் 1986–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஆறாம் நாள் முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகம், துணைப் பணி மேலாளர் தலைமையின் கீழ், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என 111 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, திருப்பூர், கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கோயம்புத்தூர்

மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் 50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## VIII. அரசு கிளை அச்சகம், கோ. புதூர், மதுரை.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வணிகவரித் துறை, காவல் துறை, நீதித் துறை மற்றும் பதிவுத் துறைகளுக்குத் தேவையான 211 வகையான நிலைப்படுத்தப்பட்ட / நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டு தோறும் தேவைப் பட்டியலின்படி இவ்வச்சகத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

1976–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், மதுரை கோ. புதூரில், சொந்தக் கட்டடத்தில் துணைப் பணி மேலாளர் தலைமையின் கீழ், 2 உதவிப் பணி மேலாளர்கள், 1 உதவி இயக்குநர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 192 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

மேலும், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும்

அச்சிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்படுகிறது.

2022-2023-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் 50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## IX. அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகம், மதுரை.

2006–ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் துவங்கப்பட்ட இவ்வச்சகத்தில் 22.01.2007 முதல் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளைக்குத் தேவையான நீதித் துறை சார்ந்த படிவங்கள் மற்றும் பதிவேடுகளின் அச்சுப் பணிகள், தினசரி மற்றும் வார வழக்குப் பட்டியல்கள் செயலாக்கம் செய்யப்படுகின்றன. இக்கிளை அச்சகத்தில், துணைப் பணி மேலாளர் தலைமையின் கீழ் அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் உட்பட 28 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

## 5. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள்

துணை இயக்குநரது நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில், இத்துறையின் மூலம் அச்சடிக்கப்பட்ட அரசு வெளியீடுகள், விதிப் புத்தகங்கள், நடைமுறை நூல்கள் மற்றும் ஒன்றிய அரசின் சட்டப் புத்தகங்களுடன் அரசு பணியாளர்களுக்கான பணிப் பதிவேடுகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

2022–2023–ஆம் ஆண்டு அரசிதழ்கள், அரசு வெளியீடுகள், துறை சார்ந்த புத்தகங்கள் மற்றும் இந்திய அரசியலமைப்பு புத்தகங்கள் ஆகியவற்றை விற்பனை செய்ததன் மூலம் ரூ.6,14,303/– (ரூபாய் ஆறு இலட்சத்து பதினான்காயிரத்து முன்னூற்று மூன்று மட்டும்) மற்றும் பெயர் மாற்றம் குறித்த வெளியீடுகள் மூலம் ரூ.95,19,475/– (ரூபாய் தொண்ணூற்று ஐந்து இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூற்று எழுபத்தைந்து மட்டும்) வருவாய் ஈட்டப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக திருச்சி மற்றும் மதுரையில் உள்ள கிளை அச்சக வளாகங்களில் உள்ள துணை விற்பனை நிலையங்கள், மத்திய மற்றும் தென்மாவட்டங்களும் உரிய காலத்தில் விரைவாகப் பயன்பெறும் வகையில் இயங்கி வருகின்றன.

2022–2023–ஆம் ஆண்டில் தனியார் அறிவிக்கைகள், பிற அறிவிக்கைகள் மற்றும் விதிப் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் மதுரை துணை விற்பனை நிலையத்தில் ரூ.15,85,249/– (ரூபாய் பதினைந்து இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து இருநூற்று

நாற்பத்தொன்பது மட்டும்), திருச்சி துணை விற்பனை நிலையத்தில் ரூ.16,04,988/- (ரூபாய் பதினாறு இலட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு மட்டும்) அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

பெயர் மாற்றம் குறித்த அரசிதழ்கள், பணிப் பதிவேடுகள், சட்டத் தொகுப்புகள், விதிகள் மற்றும் விதித் தொகுப்புகள், அரசு அலுவலகங்களின் தொலைபேசி கையேடுகள், அரசிதழ்கள் ஆகியவை அரசுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காக விற்பனை செய்யப்படுகின்றன.

## 6. பெயர் மாற்றம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரக வளாகத்தில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் மற்றும் மதுரை, திருச்சி அரசு கிளை அச்சகங்களில் இயங்கிவரும் துணை விற்பனை நிலையங்களில், பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றத்தினால் ஏற்படும் பெயர் மாற்றம் மற்றும் அரசு அறிவிக்கைகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், பெயர் மாற்றம் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தும் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். பெயர் மாற்றம் செய்து ஆங்கிலத்தில் அரசிதழில் வெளியீடு செய்ய ரூ.415/–ம், பெயர் மாற்றம் செய்து தமிழில் அரசிதழில் வெளியீடு செய்ய ரூ.115/–ம் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கட்டணம் ஏதுமின்றி, மூன்றாம் பாலினத்தவர் பெயர் மாற்றம் குறித்து அரசிதழில் வெளியீடு செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டில் 31,823 நபர்களுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

2022–2023–ஆம் ஆண்டில் பெயர் மாற்ற விபரங்களை அரசிதழில் வெளியிட்டு கட்டணமாக ரூ.1,27,09,712/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தேழு இலட்சத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று பன்னிரெண்டு மட்டும்) தனியார் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதன் மூலம் ரூ.33,62,753/– (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) ஆக மொத்தம் ரூ.1,60,72,465/– (ரூபாய் ஒரு கோடியே அறுபது

இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து நானூற்று அறுபத்தைந்து மட்டும்) அரசிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

7. **அரசு அச்சகங்களில், 2022–2023–ஆம் ஆண்டில் அரசுத் துறைகளுக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட பணிகளின் விவரம்:**

(i) நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் / பதிவேடுகள்/ உறைகள்

| வ.எண் | துறை அலுவலகங்கள் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 1. | நீதித் துறை | 4,87,000 | 70,179 | 24,000 |
| 2. | மாநில சட்டமன்றம் | -- | 1,20,070 | - |
| 3. | காவல் துறை | 2,07,52,198 | 4,28,857 | 44,000 |
| 4. | மருத்துவத் துறை | 3,06,68,000 | 1,19,000 | - |
| 5. | தொழில்நுட்ப கல்வி இயக்ககம் | 1,30,90,000 | 15,000 | - |
| 6. | பொதுப் பணித் துறை | 11,33,012 | 900 | - |
| 7. | பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 5,49,185 | - | - |

| வ.எண் | துறை அலுவலகங்கள் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 8. | ஆதிதிராவிடர் நலத் துறை | 15,38,305 | 56,795 | - |
| 9. | வருவாய்த் துறை | 1,29,85,900 | 31,000 | - |
| 10. | அனைத்து துறைகளுக்கான பொதுப் படிவங்கள் | 11,31,012 | 2,89,500 | 4,53,075 |
| 11. | கருவூலப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் | 9,50,700 | 34,570 | - |
| 12. | தலைமைச் செயலகப் பணிகள் | 1,85,000 | 8,320 | - |
| 13. | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை | 2,00,000 | - | - |
| 14. | வேளாண்மைத் துறை | 1,12,350 | 56,170 | - |
| 15. | கால்நடை பராமரிப்புத் துறை | 5,000 | 7,000 | - |
| 16. | தீயணைப்புத் துறை | - | 50,110 | - |
| 17. | வனத் துறை | - | 630 | - |
| மொத்தம் | | 8,37,87,662 | 12,88,101 | 5,21,075 |

## (ii) நிலைப்படுத்தப்படாத படிவங்கள் / பதிவேடுகள்/ உறைகள்

| வ. எண் | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் | நாட்காட்டிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அலுவலகங்களுக்கு தேவையான கடிதத்தாள் கற்றை, வாழ்த்து அட்டைகள் மற்றும் கோப்பு அட்டைகள் | 89,550 | - | 1,03,550 | 60,325 |
| 2 | சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகள், அறிவிப்புகள் மற்றும் மக்கள் சாசனம் | - | 1,20,070 | - | - |
| 3 | மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் நாட்குறிப்பேடுகள் | - | 2,000 | - | - |
| 4 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 1,01,800 | 1,010 | 14,000 | - |
| 5 | தேர்தல் துறை | 6,53,62,805 | 1,466 | 2,54,600 | - |
| 6 | முன்னாள் படை வீரர் நலத் துறை இயக்ககம் | 6,56,100 | 85,924 | - | - |
| 7 | காவல் துறை | - | 600 | 3,000 | - |

| வ. எண் | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் | நாட்காட்டிகள் |
|---|---|---|---|---|---|
| 8 | மருத்துவத் துறை | 3,56,68,000 | 1,19,000 | 2,57,000 | - |
| 9 | பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை | 10,20,600 | 2,250 | - | - |
| 10 | மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம் | - | 255 | - | - |
| 11 | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | 4,000 | 16,150 | - | - |
| 12 | பொது (தொலைபேசி)த் துறை | - | 6,000 | - | - |
| 13 | தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை | - | 2,000 | - | - |
| 14 | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 2,000 | - | 2,000 | - |
| 15 | தமிழ் வளர்ச்சித் துறை | - | 4,000 | - | - |
| 16 | நீதித் துறை | 17,41,600 | 21,469 | 40,700 | 43,000 |
| 17 | கடல்சார் வாணிபத் துறை | - | 5,000 | - | - |
| 18 | மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம், தேசிய புள்ளியியல் அலுவலகம் | 48,300 | - | - | - |
| 19 | இந்திய ஓமியோபதி துறை | - | 7,550 | - | - |

| வ. எண் | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் | நாட்காட்டிகள் |
|---|---|---|---|---|---|
| 20 | பொதுப் பணித் துறை | - | - | 2,000 | - |
| 21 | கல்வித் துறை | 2,28,07,500 | 84,94,836 | 9,83,000 | - |
| 22 | தீயணைப்பு–மீட்புப் பணிகள் துறை | - | 900 | - | - |
| 23 | சாலை போக்குவரத்து துறை | - | 400 | - | - |
| 24 | மனித உரிமை ஆணையம் | - | 15,680 | - | - |
| 25 | இந்து சமய அறநிலையத் துறை | - | 2,500 | - | - |
| 26 | தேசிய மாணவர் படை | - | 1,000 | - | - |
| 27 | பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | - | 5,000 | - | - |
| 28 | ஆதிதிராவிடர் நலத் துறை | - | 5,000 | - | - |
| 29 | தொழில்நுட்ப கல்வி இயக்ககம் | - | 3,000 | - | - |
| 30 | மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | - | 12,500 | - | - |
| 31 | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை | - | - | 30,000 | - |

| வ. எண் | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் | நாட்காட்டிகள் |
|---|---|---|---|---|---|
| 32 | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (ம) வரலாற்று ஆராய்ச்சித் துறை | 78,000 | - | - | - |
| 33 | வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை | - | - | 2,000 | - |
| 34 | 6 வது மாநில நிதிக் குழு | - | 2,400 | - | - |
| 35 | போக்குவரத்துத் துறை | - | 10,000 | - | - |
| 36 | தடய அறிவியல் இயக்ககம் | 65,000 | 114 | - | - |
| 37 | பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் | - | 1,300 | - | - |
| 38 | விதைச் சான்று அட்டைகள் | 47,13,318 | - | - | - |
| 39 | வேலை வாய்ப்புத் துறை | 2,36,850 | - | - | - |
| 40 | எழுதுபொருள் அலுவலகம் | 14,67,500 | - | 1,94,000 | - |
| மொத்தம் | | 13,40,62,923 | 89,49,374 | 18,85,850 | 1,03,325 |

## அரசு அச்சகங்களில் 2022–2023–ஆம் ஆண்டில் அச்சிட்டு வழங்கப்பட்ட பல்கலைக்கழக பணிகளின் விவரம்

| வ. எண் | விவரம் | விடைத் தாட்கள் | புத்தகங்கள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம் | 1,15,000 | – | – |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம் | 17,18,237 | 61,425 | – |
| 3 | அண்ணா பல்கலைக்கழகம் | 29,89,500 | 1,84,485 | – |
| 4 | அழகப்பா பல்கலைக்கழகம் | 7,25,000 | – | – |
| 5 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம் | 7,13,786 | 1,85,420 | 40,000 |
| 6 | சென்னை பல்கலைக்கழகம் | 42,25,000 | – | – |
| 7 | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 25,00,000 | – | – |
| மொத்தம் | | 1,29,86,523 | 4,31,330 | 40,000 |

**2022–2023–ஆம் ஆண்டில் பல்கலைக்கழகப் பணிகளின் மூலம் ஈட்டப்பட்ட வருவாய்**

| வ. எண். | விவரம் | அச்சுக் கட்டணம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம் | 19,63,961/- |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம் | 6,13,22,946/- |
| 3 | அண்ணா பல்கலைக்கழகம் | 4,51,30,009/- |
| 4 | அழகப்பா பல்கலைக்கழகம் | 1,29,77,313/- |
| 5 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம் | 1,29,61,669/- |
| 6 | சென்னை பல்கலைக்கழகம் | 8,64,84,680/- |
| 7 | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 42,33,700/- |
| மொத்தம் | | 22,50,74,278/- |

## 2022–2023–ஆம் ஆண்டு அரசுத் துறைகளிடமிருந்து பெறப்பட்ட அச்சுக் கட்டண விவரம்

| வ. எண் | விவரம் | அச்சுக் கட்டணம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் நலத் துறை | 51,935/- |
| 2 | குடும்ப நலத் துறை | 37,31,011/- |
| 3 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலத் துறை | 39,941/- |
| 4 | காவலர் பயிற்சி கல்லூரி | 29,48,362/- |
| 5 | ESI மருத்துவமனை | 2,00,605/- |
| 6 | இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை | 52,42,124/- |
| 7 | இந்து சமய அறநிலையத் துறை | 3,45,944/- |
| 8 | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம். | 1,91,356/- |
| 9 | மருத்துவக் கல்வி இயக்ககம். | 10,82,261/- |
| 10 | தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பூம்புகார் | 8,017/- |
| 11 | விதைச் சான்று இயக்குநர், கோவை. | 7,48,432/- |
| 12 | மருத்துவம் (ம) ஊரக நலப் பணிகள் இயக்குநரகம். | 9,308/- |

| வ. எண் | விவரம் | அச்சுக் கட்டணம் (ரூபாய்) |
|---|---|---|
| 13 | மின் பகிர்மான வட்டம், தருமபுரி. | 24,012/- |
| 14 | தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம். | 2,126/- |
| 15 | விதைச்சான்று இயக்குநர், சென்னை. | 69,17,812/- |
| 16 | மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம். | 48,34,682/- |
| 17 | தலைமை அரசு மின் ஆய்வாளர், சென்னை. | 4,432/- |
| 18 | கடல்சார் வாணிபத் துறை | 1,83,220/- |
| 19 | இந்திய தொல்லியல் ஆய்வுத்துறை. | 3,98,720/- |
| 20 | சீர்மரபினர் நல வாரியம். | 71,077/- |
| 21 | அரசு கேபிள் டிவி | 4,247/- |
| 22 | சாலை போக்குவரத்து நிறுவனம் | 94,004/- |
| 23 | மத்திய புள்ளியியல் (ம) திட்ட அமலாக்கம், தேசிய புள்ளியியல் அலுவலகம் | 2,31,416/- |
| 24 | ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரகம் | 5,49,765/- |
| மொத்தம் | | 2,79,14,809/- |

## 8. தொழிலாளர் நலன்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் கீழ் இயங்கிவரும் அரசு அச்சகங்கள், அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் தொழிற்சாலைகள் ஆகும். அரசு அச்சகங்களில், தொழிற்சாலைகள் சட்ட விதிமுறைக்குட்பட்டு அனைத்து விதிமுறைகளும், நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. அதன்படி, அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிலாளர் நலச் சட்டங்களான 1947–ஆம் வருட தொழில் தகராறுகள் சட்டம், 1926–ஆம் வருட தொழிற்சங்க சட்டம், 1923–ஆம் வருட பணியாளர் இழப்பீட்டு சட்டம், 1972–ஆம் வருட தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மற்றும் இதர சட்டங்களின் கீழ் பயனடைந்து வருகின்றனர்.

இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் நலன் கருதி, அரசு அச்சக நடைமுறை நூல் விதி 160–ன்படி, தொழிலாளர் நலத் துறையில் இருந்து தொழிலாளர் உதவி ஆணையர் தரத்தில் தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும், தொழிலாளர் துணை ஆய்வாளர் தரத்தில் உதவி தொழிலாளர் நல அலுவலர்

ஒருவரும் மாற்றுப் பணியில் (Deputation) பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காகவும் மற்றும் அச்சகங்களின் தூய்மையினைப் பராமரிக்கவும், அரசு அச்சக நடைமுறை நூல் விதி 159–ன்படி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையிலிருந்து சுகாதார ஆய்வாளர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

**அ) தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள் (Allowances):**

1. 1923-ஆம் ஆண்டு பணியாளர்கள் இழப்பீடுச் சட்டப்படி விபத்து நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது.

2. தொழிற்சாலைகள் சட்டம் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு பொருந்துவதால், நடைமுறையில் உள்ளவாறு சீருடை, தையல் கூலி மற்றும் இதர படிகள் வழங்கப்படுகிறது. பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வருடந்தோறும் இரு மேலங்கிகள் மற்றும் அதற்கான தையற்கூலி ரூ.700/–ம், ஆண் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு இரண்டு

ஆண்டுகளுக்கு ஒருமுறை நான்கு ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையற்கூலி ரூ.1,200/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

3. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரியும் ஆண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு 2 ஆண்டுக்கு ஒரு முறை ஒரு ஜோடி லெதர் ஷீக்கள் மற்றும் 2 ஜோடி காலுறைகள், பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு ஜோடி லெதர் காலணி வழங்கப்பட்டு வருகிறது.

4. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை காவலர், மின் வினைஞர் மற்றும் செய்தியாளர்களுக்கு மழைக்கோட்டு வழங்கப்பட்டு வருகிறது.

5. அச்சகப் பணியாளர்களுக்கான சிற்றுண்டிப் படியாக ரூ.400/-ம், சலவைப் படியாக ரூ.200/- ம் மற்றும் இடர்படியாக ரூ.400/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

**ஆ) சிறப்பூதியம்**

வரவு-செலவு திட்டம் மற்றும் அதிரகசிய பிரிவில் ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினங்கள் மற்றும்

நெருக்கடியான சூழ்நிலைகளில் முக்கியத்துவம் வாய்ந்த அச்சுப் பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பூதியமாக முதுநிலை முதலாள் ரூ.300/–, தலைமை முதுநிலை முதலாள் ரூ.240/–, ஒழுங்கமைப்பாளர், இளநிலை முதலாள், முதுநிலை தனியச்சு வார்ப்புப் பணியாளர், இளநிலை வாசகர் ரூ.210/–, இளநிலை புத்தகம் கட்டுநர், இயந்திர இயக்கி, அசல் படிப்பவர் ரூ.180/– மற்றும் கிடங்கு எழுத்தருக்கு ரூ.120/–ம் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

**இ) மனநலம் பேணுதல்**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அனைத்து அலுவலகங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களின் பணித் திறனை மேம்படுத்தும் வகையில் மனமகிழ் மன்றம் ஏற்படுத்தி, மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற ஆர்வமுள்ள பணியாளர்களை (ஆண் மற்றும் பெண் பணியாளர்கள்) அனுப்புதல், இதர விளையாட்டுகள் நடத்துதல், பணியாளர்களின் மனச்சோர்வை போக்கும் வகையிலான யோகா மற்றும் தியானம் குறித்த பயிற்சி

அளித்தல், கலை இலக்கிய பயிற்சிகள் அளித்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மனமகிழ் மன்றங்களுக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு ரூ.2,00,000/- மற்றும் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க ரூ.1,00,000/- செலவிடப்பட்டு வருகிறது. இதற்கென மனமகிழ் மன்றங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

**ஈ) தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர்கள் கூட்டுறவு நாணயச் சங்கம்**

அரசு மைய அச்சகத்தில் "எ" வகை கூட்டுறவு நாணயச் சங்கமும் மற்ற 5 கிளை அச்சகங்களில் "பி" வகை கூட்டுறவு நாணயச் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

அரசு மைய அச்சகத்தில் செயல்படும் கூட்டுறவு நாணயச் சங்கம் தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவடைகிறது. இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ள பணியாளர்கள் தமது பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நிலையில், அவர் சங்கத்தில் பெற்ற கடன் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படுவதுடன், இயற்கை

எய்தும் சங்க உறுப்பினர் குடும்பத்தாருக்கு ஈமச்சடங்கிற்காக ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்களிடையே சேமிப்பு மனப்பான்மையை ஊக்குவிக்கும் பொருட்டு கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாக தொடர் வைப்புத் திட்டம் மற்றும் கால வைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இச்சங்க உறுப்பினர்களுக்கு அதிகபட்சமாக ரூ.12,00,000/–(ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) கடனுதவி வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ் மொழியை ஒரு பாடமாகக்கொண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தரவரிசைப்படி முதல் மூன்று இடங்களைப் பெறும் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**உ) கூட்டுறவு பண்டகசாலை**

சென்னை அரசு மைய அச்சக வளாகத்தில் தொழிலாளர்கள் / பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் உணவுப் பொருட்களை

நியாய விலையில் பெற்று பயனடையும் பொருட்டு 1965–ஆம் ஆண்டு முதல் ஒரு கூட்டுறவு பண்டகசாலை சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

**ஊ) அரசு அச்சகக் குடியிருப்பு**

அரசு அச்சகப் பணியாளர்களுக்கென சென்னை தண்டையார் பேட்டை, காமராஜர் நகரில் குடியிருப்புகள் கட்டப்பட்டு 60 ஆண்டுகள் கடந்ததால், மிகவும் பழுதடைந்து, பல குடியிருப்புகளின் மேற்கூரை மற்றும் சுற்றுச் சுவர்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும், சாலையின் அளவு அதிகரிப்பதால் கழிவு நீர்க் கால்வாய்கள் சீரற்ற நிலையில், குடியிருக்க உகந்தவாறு இல்லாததால், 2022–2023–ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் உள்ள அரசு அச்சகப் பணியாளர்கள் குடியிருப்புகளை முற்றிலுமாக இடித்துவிட்டு சென்னை பெருநகர குழும வளர்ச்சி திட்டத்தின் திருத்திய விதிகளின்படி நவீன வசதிகளுடன் கூடிய குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.34,49,25,222/– நிதி ஒப்பளிப்பு

செய்யப்பட்டதையடுத்து, ஆறு அடுக்கு மாடிகளுடன் கூடிய 96 குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் இம்மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்பட உள்ளது.

**9. பணி நியமனங்கள்**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செய்தித்தாள் விளம்பரங்கள், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் மற்றும் கருணை அடிப்படையில் நியமனம் ஆகியவற்றின் மூலம் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

**வெளி ஆதாரம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள்**

பல்கலைக்கழகத் தேர்வுகள், அரசுத் தேர்வுகள் மற்றும் அவசர பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 42 புத்தகம் கட்டுநர்கள், 1 ஓட்டுநர், 49 மஸ்தூர்கள், 75 சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் 34 பாதுகாவலர்கள் (Security) என மொத்தம் 201 பணியாளர்கள் வெளி ஆதார முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.

## 10. வரவு–செலவு

2022–2023–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு மற்றும் 2023–2024–ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு விவரங்கள்:

| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
|---|---|---|---|---|---|
| கணக்குத் தலைப்பு | | 2022–2023 ஆம் ஆண்டு வரவு–செலவு மதிப்பீடு (B.E) | 2022–2023 ஆம் ஆண்டு வரவு–செலவு திருத்திய மதிப்பீடு (R.E) | 2022–2023 ஆம் ஆண்டு இறுதி திருத்திய நிதி ஒதுக்கீடு (FMA) | 2023–2024 ஆம் ஆண்டு வரவு – செலவு திட்ட மதிப்பீடு (B.E) |
| 2058 | எழுதுபொருள் மற்றும் அச்சு | 162,09,04 | 160,97,40 | 144,38,93 | 166,01,98 |
| 2059 | பொதுப் பணிகள் | 49,99 | 49,99 | 49,99 | 52,49 |
| 4058 | எழுது பொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு | 94,04 | 2,25,11 | 2,50,08 | 15,50,30 |
| **மொத்தம்** | | **163,53,07** | **163,72,50** | **147,39,00** | **182,04,77** |

## 11. கழித்தொதுக்கம்

காகித கழிவுகள் ஒன்றிய அரசின் சார் நிறுவனமான உலோகக் கழிவுகள் வர்த்தக நிறுவனம் மூலம் மின்–ஏல முறையில் விற்பனை செய்யப்பட்டதில் ரூ.93,69,904/– மற்றும் கழித்தொதுக்கம் செய்யப்பட்ட இயந்திரங்கள், உதிரிபாகங்கள் மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட அலுமினிய அச்சுத் தகடுகள் ஆகியவற்றை விற்பனை செய்யப்பட்டதன் மூலம் ரூ.21,56,816/– ஆக மொத்தம் ரூ.1,15,26,720/– அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

மேலும், அரசு அச்சகங்களில், தனி அச்சு வார்ப்பு எழுத்துகளும், ஈயக் கலவை வார்ப்பு அச்சுக் கோர்க்கும் முறையும் வழக்கொழிந்த காரணத்தினால், அரசு அச்சகங்களில் இருப்பில் உள்ள உலோகங்கள் மற்றும் உலோகம்சார் பொருட்களை மின்–ஏல முறையில் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் மூலம் கழித்தொதுக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 12. தகவல் பரவலாக்கம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்கென http://www.stationeryprinting.tn.gov.in எனும் இணைய வலைதளம் வடிவமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதுடன், பெயர் மாற்றம் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவனச் சரிவு நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள் ஆகியன அச்சிடப்பட்டு இவ்வலைதளத்தில் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அன்று பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

பெயர் மாற்றம் குறித்த படிவங்களை வலைதளம் மூலம் பொதுமக்கள் உடனுக்குடன் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இவ்வலைதளத்தை மேம்படுத்த 2022−2023−ஆம் நிதியாண்டில் ரூ.2,00,000/− (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, தேசிய தகவல் மையம் (National Informatics Centre) மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


## நிறைவுரை

பண்டைய கால வரலாற்றினை நாம் அறிந்து கொள்ள கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் நிலைத்து நிற்பதைப்போல, அச்சகமும், இக்கால மனித வாழ்க்கை நடைமுறை போன்றவற்றினை தற்கால வரலாறாக அச்சடித்து நிலை நிறுத்துதலில் பெரும் பங்காற்றி வருகிறது. மேலும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சி வெகுவாக வளர்ந்து வரும் இக்கால கட்டடத்தில், அச்சுத் தொழில்நுட்பமும் பல்வேறு மாறுதல்களுடன் வளர்ந்து வரும் தொழில்நுட்பமாக மாறி, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்து, தொன்மை வாய்ந்த துறையாகத் தனது சேவையினை தொடர்ந்து நிறைவேற்றி மென்மேலும் மெருகேற்றி அரசின் முக்கிய துறையாக பங்காற்றி வருகிறது.

**மு.பெ.சாமிநாதன்,**
**செய்தித் துறை அமைச்சர்.**

BLANK

# நிருவாக அமைப்பு


ஆணையர்
தொழில்நுட்பப் பிரிவு
கணக்குப் பிரிவு
நிருவாகப் பிரிவு
ஆணையரின் நேர்முக உதவியாளர்
அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை
பொது மேலாளர்
முதன்மைக் கணக்கு அலுவலர்
இணை இயக்குநர்
மேலாண்மைக் குறிக்கோள் ஆலோசகர்
விலை மதிப்பீட்டு கணக்கு அலுவலர்
உதவிப் பணிமேலாளர் (கொள்முதல்)
உதவிப் பணிமேலாளர் (படிவங்கள்)
உதவி இயக்குநர் (நிருவாகம்)
உதவி இயக்குநர் (இருப்பு சரி பார்ப்பு)
தொழிலாளர் நல அலுவலர்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
உதவி இயக்குநர் (எழுதுபொருள்)
உதவி இயக்குநர் (கொள்முதல்)
உதவிப் பணிமேலாளர்
அரசு மைய அச்சகம், சென்னை
அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை
அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி
அரசு கிளை அச்சகம், சேலம்
அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்
அரசு கிளை அச்சகம், மதுரை
அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை
பணி மேலாளர்-I
பணி மேலாளர்-II
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்

## பணிபுரிவோர் எண்ணிக்கை

| வ.எண். | அலகு | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | தொழில்நுட்ப பணியாளர்கள் | இதரபிரிவு | மொத்தப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆணையரகம் சென்னை. (அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உட்பட) | 14 | 132 | 33 | 35 | 214 |
| 2 | அரசு மைய அச்சகம், சென்னை. | 24 | 98 | 465 | 85 | 672 |
| 3 | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை. | 2 | 39 | 19 | 14 | 74 |
| 4 | அரசு கிளை அச்சகம், மதுரை. | 4 | 24 | 153 | 11 | 192 |
| 5 | அரசு கிளை அச்சகம், சேலம். | 1 | 20 | 80 | 10 | 111 |

| வ.எண். | அலகு | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | தொழில்நுட்ப பணியாளர்கள் | இதரபிரிவு | மொத்தப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 6 | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | 2 | 14 | 59 | 9 | 84 |
| 7 | அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி. | 2 | 17 | 73 | 7 | 99 |
| 8 | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | 1 | 12 | 70 | 8 | 91 |
| 9 | அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை. | – | 6 | 18 | 4 | 28 |
| மொத்தம் | | 50 | 362 | 970 | 183 | 1565 |



2022–2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, சென்னை அரசு மைய அச்சகத்தில் ரூபாய் 1.15 கோடி மதிப்பீட்டில் நான்கு வண்ண எண்ணிம உற்பத்தி அச்சு பொறி இயந்திரம் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டது. (23.03.2023)



2022–2023– ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, அரசு மைய அச்சகத்தில் நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.



அரசு மைய அச்சகத்தின் பிரதான அச்சக கட்டடம்



நான்கு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம், அரசு மைய அச்சகம், சென்னை.



சென்னை அரசு மைய அச்சகத்தில் புத்தகங்களை விரைவாகவும், நேர்த்தியாகவும் கட்டுமானம் செய்ய பயன்பாட்டில் உள்ள புத்தகம் கட்டும் இயந்திரம்.



2022–2023– ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, அரசு மைய அச்சகம், மதுரை, விருத்தாசலம், திருச்சி, சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய அரசு கிளை அச்சகங்களில் கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் மற்றும் நெகிழி அடித்தட்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.



சென்னை உயர்நீதிமன்ற வளாக அரசு கிளை அச்சகத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்ட ஓரியண்ட் வெப் ஆப்செட் இயந்திரம் மதுரை அரசு கிளை அச்சகத்தில் ஏற்கனவே இயங்கி கொண்டிருந்த இயந்திரத்துடன் இணைக்கப்பட்டு தற்போது A4 அளவில் 48 பக்கங்கள் அச்சிடப்படுகிறது.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.